Registered as a Newspaper in Ceylon ★ விலைசதம் 10

# ஈழநாடு

EELANADU

தொலைபெசி. எண்: 49 | மலர் 10
போன் 389 | National Tamil Daily | இதழ் 137 | தேசிய தினசரி

யாழ்ப்பாணக் கிளை ஆனி 14 ரபிஉல் அவ்வல் 30 வியாழக்கிழமை (27-6-68)




# வெளி நோயாளர் சிகிச்சை நிலயம் அமைக்க ரூ.10 லட்சம்

## காணி சுவீகரிக்கப்பட்டதும் கட்டிடவேலைகள் தொடங்கும்

யாழ்ப்பாணம், வியா: யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரிக்கென தனியாக வெளிநோயாளர் சிகிச்சைப் பகுதி கட்டுவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதிய கட்டிட அமைப்புக்கான படம் வரையவும் அதற்கான செலவு பற்றி மதிப்பிடவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

புதிய வெளிநோயாளர் சிகிச்சைப் பகுதி அமைப்பதற்கு ஐந்து லட்சம் ரூபாய் செலவாகுமென முன்னர் மதிப்பிடப்பட்டிருந்ததெனினும் இப்போது புதிய சிகிச்சை நிலையம் அமைப்பதற்கு குறைந்தது பத்து லட்சம் ரூபாய்வரை செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஆஸ்பத்திரியின் மேற்கு எல்லைக்கும் மின்சார நிலையத்துக்கும் இடையேயுள்ள மாநகரசபைக்குச் சொந்தமான காணியிலேயே புதிய சிகிச்சை நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இக்காணியைக் கொடுப்பதற்கு யாழ்ப்பாணம் மாநகரசபை முன்னர் மறுத்து வந்தது. வெளிநோயாளர் சிகிச்சை நிலையம் அமைப்பதற்காக மாநகரசபைக்குச் சொந்தமான அந்தக் காணியை சுவீகரிப்பதற்கு அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. இது பற்றிய செய்தி 'ஈழநாடு' பத்திரிகையில் முன்னரே வெளிவந்தது வாசகநேயர்களுக்கு நினைவிருக்கும்.

காணி சுவீகரிக்கப்பட்டு சுகாதார சேவைப் பகுதியினரிடம் கையளிக்கப்பட்டதும் கட்டிடம் அமைக்கும் வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

## பல்கலைக்கழக நெருக்கடியை தவிர்க்க புதிய திட்டம்

### டாக்டர் மலலசேகரா தயாரிக்கிறார்

கொழும்பு, புதன், பல்கலைக்கழகங்களில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு தேசிய உயர் கல்விச்சபைத் தலைவர் டாக்டர் ஜி. பி. மலலசேகரா திட்டம் ஒன்றைத் தயாரிக்கிறார்.

பல்கலைக்கழக புகுமுக வகுப்புகளில் சித்திபெறுபவர்களுக்குமுதல்வருடவகுப்பையும், பரீட்சையையும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில கல்லூரிகளில் நடாத்துவதற்கு டாக்டர் மலலசேகராவின் இந்தத்திட்டம் வழி வகுக்கிறது.

இதுசம்பந்தமான முழுத் திட்டமும் விரைவில் தயாரிக்கப்பட்டு அரசாங்கத்தின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்படுமெனத் தெரிகிறது.

## யாழ். நகரில் மலசலகூடங்கள் மாற்றி அமைக்கப்படும்

### நீரமைப் முறையை செயலாக்க யாழ். மாநகரசபை திட்டம்

யாழ்ப்பாணம், வியா. யாழ்மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் 2,200வாளி மல கூடங்களை 8 ஆண்டுத் திட்டத்தின் கீழ் நீரமைப்பு மலகூடங்களாக மாற்றமாநகரசபை நடவடிக்கை எடுத்து வருகின்றது. முதல்வருடத்தில் 1லட்சம் செலவில் ஆயிரம் மலகூடங்களை நீரமைப்பு மலகூடங்களாக மாற்றியமைக்கத் திட்டமிட்டுள்ளது.

வாளிமல கூடங்களை அகற்றி விட்டு நீரமைப்பு மலகூடங்களாகக் கட்டுவதற்கு நூறு ரூபா பெறுமதியான நீரமைப்பு மலகூடக்கோப்பையும் குழிமூடியும் குழாயும் மாநகரசபைகொடுத்துதவ முன்வந்துளளது. இந்த உதவியைப் பெற விரும்புகின்றவர்கள் மாநகரசபைக்கு விண்ணப்பிக்கலாம். வாளிமலகூடங்களை நீர்அமைப்பு மலகூடங்களாக மாற்றுவதுபற்றி சுகாதாரப் பரிசோதகர்கள் தீவிர கவனம்செலுத்துவார்கள். இதற்கான முடிவுகள் அண்மையில் விசேஷ ஆணையாளரானகல் கூட்டப்பட்ட மகாநாட்டின் போது நிறைவேற்றப்பட்டது. (ந.நி)

## பிரதமருக்கு கம்யூ. எம்.பி. ஆதரவு

மாத்தறை, புதன் அரசாங்கத்தின் உணவு உற்பத்திக் கொள்கைக்கு கம்யூனிஸ்ட் [மாஸ்கோசார்பு] கட்சியைச்சேர்ந்த சம்புறுப்பிட்டிய எம். பி. திரு. பேர்ஸி விக்கிரமசிங்கா ஆதரவு தெரிவித்துள்ளார்.

அம்பலாந்தோட்டையில் பிரதமர் டட்லிசேனநாயகா தலைமையில் நடைபெற்ற விவசாயிகள் மகாநாட்டில் அரசாங்கம் உணவு அபிவிருத்தி சம்பந்தமாக எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு தமது பூரண ஆதரவை நல்குவதாக திரு.பேர்ஸி விக்கிரமசிங்கா உறுதி அளித்தார்.

## "கல்வித்திட்டத்தில் மாற்றம் வேண்டும்"

யாழ்ப்பாணம். வியா. "எமது முன்னோர்கள் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ்வாழ்ந்தனர். இதனால்சுயமாக பொருளாதாரமாற்றமெதையும் செய்யவோ, சிந்திக்கவோ முடியாத நிலையிலிருந்தனர். இட்ட பணியைச் செய்வதோடு மட்டும் திருப்திகொண்டனர். இந்நிலை நம்மைப் பின்தொடரவிடாமல்பொருளாதார ஆக்கத்துறையில் ஈடுபடவேண்டும்".

சங்கானைப் பட்டினசபை நூல்நிலையத்தில் நடைபெற்ற போயாதினக் கருத்தரங்கில் திரு. இ. அப்பாத்துரை பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். சங்கானைப் பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. அப்பாத்துரை மேலும்கூறியதாவது:

பண்டுதொட்டு விவசாய நாடான இலங்கையில் இன்றும் 40 வீதம் உணவுத் தேவைக்கு வெளிநாடுகளைக் கையேந்திநிற்கும்நிலை ஏற்பட்டுள்ளது. எமது நாட்டிலே களனிகள் பல காடுகளாகிவிட்டன. குளங்கள் பல அழிந்துவிட்டன. வாலிபர் வேலையற்றுத் தவிக்கின்றனர். எமது நாட்டின் குடியேற்றத்திட்டங்கள் முழுவெற்றியளிக்கத் தவறிவிட்டன. காரணம் முழு மனதுடன் பொதுமக்கள் ஒத்துழைக்கத் தவறிவிட்டனர். படித்த வாலிபர்கள் குடியேற்றத் திட்டத்தில் சென்று குடியிருக்க தவறுகின்றனர். பணம்படைத்தோர் லாபத்தை விவசாயத்தில் அதிகம் பெருக்க முடியாது எனக் கண்டு அதில் ஈடுபடத் தவறுகின்றனர். எனவே விவசாயம் பாமர ஏழைகளின் தொழிலாகக் கிடந்து

[6-ம் பக்கம் பார்க்க]

## "தேசிய அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் மக்களை முட்டாள்களாக்குகின்றன

### தமிழ்-சிங்கள இனத்தின் ஐக்கியத்தை குலைக்கவே மாவட்டசபை மசோதா"

### நெல்லியடியில் எட்மண்ட் சமரக்கொடி

உடுப்பிட்டி, புதன் "தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளும், எதிர்க்கட்சிகளும் பொதுமக்களை முட்டாளாக்கி வருகின்றன. நாட்டில் இனத்துவேஷத்தை ஏற்படுத்திச் சிங்கள தமிழ்இனத்தின் ஐக்கியத்தைக் குலைத்து ஆட்சி நடாத்தவே பிரதமர் டட்லி மாவட்டசபை மசோதாவைக் கொண்டுவந்துள்ளார். அரசினரின் குழப்பமான சட்டங்களினால் மக்கள் பிரிக்கப்படுகின்றனர்.

கச்சேரி முறை எமது நாட்டுக்கு உகந்ததல்ல. வெள்ளையர்களின் அந்நிய ஏகாதிபத்திய நினைவுச்சின்னமான கச்சேரிமுறையை ஒழிப்போமென உறுதிகூறியவர்கள் இன்று கச்சேரிக்குஅதிகஅதிகாரங்களைவழங்கியுள்ளனர். கச்சேரிமுறை விஸ்தரிக்கப்பட்டால் ஸ்தலஸ்தாபன சபைகள் பிரயோசனமற்றதாகிவிடும்".

இவ்வாறு அகில இலங்கை புரட்சிவாத சமசமாஜக் கட்சி முக்கியபிரமுகர்களில் ஒருவரும். முன்னாள் புலத்சிங்கள எம்.பி.யுமான திரு. எட்மண்ட் சமரக்கொடி நேற்றுப்பகல் நெல்லியடி யாழ்.டியூட்டோறியல் கல்லூரி மண்டபத்தில் 'இன்றைய அரசியல்நிலை' என்னும் பொருள்பற்றிப்பேசுகையில் கூறினார்.

வடமராட்சி சமசமாஜ வாலிபமுன்னணியினரின் இக்கூட்டம் திரு.எஸ். முருகேசு தலைமையில் நடைபெற்றது.

திரு.சமரக்கொடி மேலும் பேசுகையில் கூறியதாவது:-

'ஐக்கியதேசியக்கட்சி நாட்டில் பொருளாதாரத்தைப் பெருக்கத் தவறிவிட்டது. தமிழினத்தை தமிழரசு, தமிழ்காங்கிரஸ் கட்சிகளும் அரசாங்கமும் ஏமாற்றி வருகின்றன. அரசாங்கத்தின் புதிய நடவடிக்கைகளின் மூலம் தமிழர்கள் எவ்வித நன்மையும் பெறவில்லை; சிங்களவர்கள் தமது நன்மைகளை இழந்துவிடவுமில்லை. எதிர்க்கட்சியினரின் இவ்வித கொள்கை ஆபத்தானது.

(6ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

ஒருவர்மீது அன்பாக இருக்கும்போது நமக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. பலர்மீது அன்பு செலுத்துகையில், நம் மகிழ்ச்சியும் அதிகரிக்கிறது. எல்லோரையும் எல்லாவற்றையும் நேசிக்கும்போது, நமது இன்பத்துக்கு எல்லையுண்டா?

— சுவாமிராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone 389.

[illegible] கீலக வருஷம் ஆனி மாதம் 14-ந் திகதி
(27-6-68)

## பல்கலைக்கழக மாணவர் தெரிவு

இலங்கைப் பல்கலைக் கழகத்துக்கு நியாயமற்ற முறையில் பெருந்தொகையான தமிழ் மாணவர்கள் விஞ்ஞானத் துறைக்குத் தெரிவு செய்யப்படுவதாகச் சிலர் புகார் தெரிவிப்பதில் ஆதாரமில்லையென்றும் இத்தவறான கருத்தை நீக்குவதற்கு பல்கலைக்கழக மாணவர் தெரிவுகுறித்து ஆராய பாரபட்சமற்ற விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென்றும் உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் யோசனை கூறியிருக்கிறார். தமிழ் மாணவர்கள் நியாயமற்ற முறையில் தெரிவு செய்யப்படுகிறார்களென்ற குற்றச்சாட்டை நீக்குவதற்கு மட்டுமல்லாது பல்கலைக் கழகத்துக்கு மாணவர்கள் எப்படித் தெரிவு செய்யப்படுகிறார்கள் என்பது முழுவதையும் ஆராய்வதற்கு விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டியது அவசியம்.

இந்நாட்டின் கல்வித் துறையே பெரும் பிரச்னைகள் நிறைந்து குழப்பமான நிலையிலிருக்கிறதென்றும் அமைச்சர் திருச்செல்வம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பரிசளிப்பு விழாவிலும் ஸ்தாபகர் தினக் கொண்டாட்டத்திலும் கலந்து கொண்டு பேசுகையில் கருத்து வெளியிட்டார். கல்வித்துறை பெரும் சிக்கல் நிறைந்து குழப்பமாக இருக்கிறதென்பது உண்மையே. கல்வித் துறையைச் சீர்திருத்த வேண்டுமென்று பலரும் அடிக்கடி சொல்லி வருகின்றனர். கல்வி அமைச்சரும்கூட கல்வி முறையைச் சீரமைப்பதுதான் தமது முதல் வேலை என்று பதவியேற்றதும் சொன்னார். வெளிநாடுகளுக்குச் சென்று வந்தார். வெள்ளையறிக்கையொன்றையும் கொண்டு வந்தார். கல்வித்துறை சீர்திருந்துவதற்கு மாறாக மேலும் குழப்பமடைந்து சீரழிந்திருக்கிறதென்றே சொல்ல வேண்டும்.

கல்வியில் சீர்திருத்தம் செய்வதென்றால் ஒன்று அதில் மொழிப் பிரச்னையைக் கொண்டுவர வேண்டும் அல்லது இனப் பிரச்னையைக் கொண்டுவர வேண்டும் என்பது சிலரது கருத்து.

கல்வியில் தகுதிக்கும் திறமைக்கும் முதலிடம் கொடுப்பதை விடுத்து மொழி அடிப்படையிலும் இன விகிதாசாரத்தின் அடிப்படையில் கவனம் செலுத்தத் தொடங்கியதிலிருந்தே தான் கல்வித் துறை சீரழியத் தொடங்கியது. தமிழ் மாணவர்களானாலும்சரி வேறு எந்த மாணவர்களானாலும் சரி பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சையில் சித்தியடைந்தால் அவர்களுக்கு பல்கலைக்கழகக் கல்வி கிடைக்க வசதி செய்யப்பட வேண்டும். இதை விடுத்து தமிழ் மாணவர்கள் பெருமளவில் சித்தியடைந்தாலும் இன அடிப்படையில் பல்கலைக்கழக கல்வி அளிக்க வேண்டுமென்பதற்காக பரீட்சையில் சித்தியடையாத, உயர்கல்வி பெறத் தகுதியில்லாத மாணவர்களுக்கு பல்கலைக்கழகக் கல்வியளிப்பதால் யாருக்கு லாபம்?

பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதில் நேரத்துக்கு நேரம், காலத்துக்குக் காலம் நினைத்த நினைத்த முறையில் விதிமுறைகளில் மாற்றம் செய்யப்படுவதாகவும் இதனால் மாணவர்கள் பெரும் சிரமத்துக்குள்ளாவதுடன் அவர்கள் மனமுடைந்து போவதாகவும் புகார் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் புகார்களெல்லாவற்றையும் விசாரித்து பல்கலைக்கழக மாணவர் தெரிவில் தகுதிக்கும் திறமைக்கும் முதலிடம் கொடுக்கவும் நீதியும் நேர்மையும் கடைப்பிடிக்கப்படவும் வழிகாணப்பட வேண்டியது மிகமிக அவசியம்.

# வில்லூன்றி விநாயகர் ஆலய புதிய ராஜகோபுரம்

## இன்று நடைபெறும் மகாகும்பாபிஷேகம்

— சைவப் புலவர் வ. கந்தசாமி —

யாழ்ப்பாணம் வில்லூன்றி க்ஷேத்திரமென விளங்கும் பூர்வ தனுஷ்கோடி தீரத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் வீரகத்தி விநாயகராலய புதிய ராஜகோபுர மகா கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் 10 மணிக்குமிடையில் நடைபெறுகிறது.

"நமக்கு இச்சரீரம் கொடுக்கப்பட்டது. கடவுளை வழிபட்டு முத்தியின்பம் அடைதற் பொருட்டேயாம்" என்பது நாவலர் பெருமானின் நல்வாக்காகும். ஆன்மாக்கள் இறைவனை வழிபட்டு அருள் நிலை அடைவதற்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு தான் அருள் காணப்படுகின்றது. அத்தகைய ஆலயங்கள் தான் சமய அறிவுக்கு வழிகாட்டியாக அமைகின்றன. சமய அறிவோடு சேர்ந்த வாழ்வு தான் சிறப்புடைய வாழ்வாகும். எனவே ஆலயங்கள் புனிதம் நிறைந்தவையாக விளங்க வேண்டும். விசேடமாக மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையுமாயின் மிகவும் சிறப்புடைத்தாகும். ஆலயங்களின் ஒவ்வொரு அமைப்பும் மக்களின் அஞ்ஞான அறிவை அகற்றி மெய்ஞ்ஞான தீபத்தை ஏற்றி நிற்கின்றது.

ஸ்தூலலிங்கம் என்று போற்றப்படும் கோபுர தரிசனம் மிகமேலானது. ஆலயங்களின் கோபுரத்தின் அமைப்பையும், அவசியத்தையும் அறிந்தே பண்டைத் தமிழ் மன்னர்கள் நம் தாய்நாடாகிய இந்தியாவில் ஆலயங்கள் தோறும் அழகிய கோபுரங்களை அமைத்தனர். எவர்களும் கோபுரத்தைக் கண்டவுடன் அருட்பிரவாகம் அடையப் பெற்று ஆனந்த பரவசமடைகின்றனர். இராஜ கோபுரங்கள் ஆலயத்திற்கும், அந்நகருக்கும் அணி செய்து விளங்குகின்றன. கோபுரங்கள் பொலிவுற்று விளங்கும் ஆலயங்களையுடைய கிராமத்தில் வாழும் மக்கள் புண்ணியம் புரிந்தவர்கள் என்றே கூறவேண்டும்.

ஆன்மாக்கள் அருள் நிறைந்த உள்ளத்தோடு இறைவன் எழுந்தருளியிருக்கும் ஆலயங்களில் சிறந்த திருப்பணிகளைச் செய்ய வேண்டும். இறைவனையும் அப்பெருமான் எழுந்தருளி இருக்கும் கோலக் காட்சியைப் பார்த்து நாம் மகிழ்ச்சியடைகிறோம். இன்றைய சூழ்நிலையில் பெரும்பாலும் ஆலயங்களிலேயே சமயக்கல்வி வளர்க்கப்பட வேண்டும். தெய்வ நம்பிக்கையை வளர்க்கவும், சமய ஞானத்தை ஊட்டவும் ஆலயங்கள் அமைய வேண்டும். அமைதியான சூழ்நிலையை உருவாக்கும் தலமாக ஆலயம் அமைய வேண்டும். திருக்கோவில் இல்லாத ஊர் அடவிகாபட்டுக்கு ஒப்பாகும் என்பர் நாவுக்கரசர். எனவே ஆலயங்களில் திருமுறைகளுக்கு முக்கிய இடம் அளிக்கப்பட வேண்டும். புராணபடனங்கள் நடைபெறவேண்டும். நாவலர் காட்டிய வழியில் சைவசமய உபந்நியாசங்கள் நடைபெறவேண்டும். ஞானத்தை வளர்க்கும் திருக்கோவிலாக அமைய வேண்டும்.

இத்தகைய பணிகளை ஓரளவு வில்லூன்றி விநாயகர் ஆலய தர்மகர்த்தா திரு. சோ. இராசரத்தினம் அவர்கள் செய்துவருகின்றார்கள் என்பது கண்கூடு. இறையருளின் நோக்காலும், தர்மகர்த்தாவின் முயற்சியாலும் இவ்வாலயத்தின் இராஜகோபுரவேலை முற்றுப்பெற்று இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறும் பெருவிழாக்காட்சியைக் காணும் வாய்ப்பு நமக்குக் கிட்டியுள்ளது.

யாழ்ப்பாண நகரின் மேல்பால் ஸ்ரீ ராமபிரானால் ஸ்தாபிக்கப்பட்ட வில்லூன்றி என்னும் தீர்த்தத்தை உடையதும், மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமையப்பெற்றதுமான வில்லூன்றி என்னும் க்ஷேத்திரத்திலே ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டு ஸ்ரீ வீரகத்தி விநாயப் பெருமான் எழுந்தருளி இருக்கும் காட்சியை எண்ணும்போது அருட்பிரவாகம் பொலிகின்றது. இன்று இராஜகோபுர தரிசனத்தையும் காணும்போது என்ன ஆனந்தம்.

இவ்வாலயத்தில் நித்திய நைமித்திய கருமங்கள் யாவும் சிறப்பாக நடைபெறுகின்றன. சில வருடங்களுக்கு முன்பு பெரிய புராணபடனம் நடைபெற்று, நிறைவேற்றுவிழாவில் பெரியபுராணம் வெள்ளையானை மீது வண்ணைச் சிவன் கோவிலிலிருந்து அலங்காரமாகக் கொண்டு வந்த காட்சி அடியார்களின் பெருமையையும், சேக்கிழார் பெருமானின் தெய்வீகச் சிறப்புக்கும் என்ன தொடர்பு உண்டென்பதை அக்கிராம மக்கள் நன்கு அறியவும் தொண்டர் தம் பெருமையை எடுத்துக் காட்ட இப்பெருவிழா உதவியது. உயர் திரு. திருலிங்கத்தினால் கூட்டுப்பிரார்த்தனை ஆரம்பித்து வைக்கப்பட்டு இன்றும் நடைபெற்று வருகின்றது.

அருள் மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் சொல்லூன்றிப் பிரசங்கம் நிகழ்த்திய இடம் இத்தலம். ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சொல் ஒலியங்கள் ஊன்றப்பட்ட தலம். இன்னும் பல அறிஞர்களின் அறிவுரைகளைப் பலகால் கேட்கும் சந்தர்ப்பத்தை இவ்வாலய நிர்வாகஸ்தர் நடாத்திவருகின்றார் என்பது மிகையாகாது. இவை எல்லாவற்றிற்கும் காரணகர்த்தாவாகவிளங்கும் இறைவன் திருவருளே என்னென்பது.

ஆடம்பரமின்றி அமைதியான சூழலில் சமய அறிவும் மெய்ஞ்ஞான தீபமும் வளர்ச்சி அடைவதற்கு ஏற்ற தலம்.

இன்று நடைபெறவிருக்கும் இராஜகோபுர மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவைக் கண்டு இறையருள் பெற்று உய்வோமாக.

## சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா

திருக்கோணமலை, புதன்

திருக்கோணமலை மாவட்டக் கூட்டுறவுசமாஜத்தின் ஆதரவின் கீழ் சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா தம்பலகமம் மகாவித்தியாலயத்தில் அடுத்தமாதம் 1ம் திகதி நடைபெற விருக்கிறது. திருக்கோணமலை பிரதம கல்வி அதிகாரி திருமதி ஆர். எஸ். யாமர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

### கலைவிழா

வவுனியா, புதன்

ஓமந்தை உபவட்டாரங்களின் கலைவிழா தமிழ் வட்டாரப் பாடசாலைகளில் இம்மாதம் 27-ம் திகதி திரு பி. பரமேஸ்வரநாதன் தலைமையில் நடைபெற இருக்கிறது.

## வில்லூன்றி விநாயகர் தோத்திரம்

பண்ணவரும் ஆதிசிவன் பாலாபோற்றி
பாரெல்லாம் விளங்கும் கணபதியே போற்றி
கண்மலரும் தவஞானக் கரும்பே போற்றி
கதியுதவும் ஓங்காரக் களிறே போற்றி
எண்மலரும் எழுந்தான இறைவா போற்றி
எழிற்வாசாங் குசங்கொண்ட எந்தாய் போற்றி
[illegible] கோயில் கொண்ட
வில்லூன்றி விநாயகரே போற்றி போற்றி.

— அருட்கவி சீ. வி.

## நாட்டிலும் நகரிலும்

முன்னொரு காலத்தில் யாழ்ப்பாணம் பெரியஆஸ்பத்திரியில் ஒரு பிரபலமான டாக்குத்தர் வாழ்ந்து வந்தார். அவருக்கு பெண் கொடுத்த அருமை மாமியாரும் வீட்டில் வசித்து வந்தாள்.

இந்த பிரபலமான டாக்குத்தருக்கு ஒரு வழக்கமிருந்தது. அவ்வளவு விரும்பத்தக்க வழக்கம் என்று சொல்லமுடியாது. அவ்வழக்கத்தை அவரே பழக்கிக்கொண்டாரோ அல்லது அவரைக் காணவரும் நோயாளிகளும் நோயாளிகளின் நண்பர்களும் பழக்கினார்களோ தெரியவில்லை.

இந்த வழக்கத்தை அந்த அருமை மாமியார் ஒரு சிசுவை வளர்ப்பதுபோல் பாலூட்டி, சீராட்டி வளர்த்துவந்தாள். டாக்குத்தரை விட மாமியார்தான் அதை முழுமுச்சாகப் பேணிவந்தாள்.

காலையில் டாக்குத்தர் ஆஸ்பத்திரிக்கு புறப்படு முன்பு இந்த அம்மாள் வீட்டு வாசலில் முகாம் போட்டு ஸ்திரமாக உட்கார்ந்துவிடுவாள். யாராவது ஒருவர் வந்து டாக்குத்தர் ஐயாவை காண வேண்டுமென்று விரும்பினால் அம்மாள் அவரை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, அவர் வெறுங்கையாக வந்திருந்தால், 'ஐயா இல்லை' என்று கொட்டையாக கூறிவிடுவாள்.

வந்தவர் உடனே பொக்கட்டுக்குள் கையைப் போட்டு ஓர் என்வெலப்பை வெளியே இழுப்பார். அதைக் கண்டதும் மாமியார் அம்மாள் 'கொஞ்சம் நில்லுங்கோ வாறன்' என்று சொல்லிவிட்டு உள்ளே போய் டாக்குத்தரை அழைத்துவருவாள்!

இப்பொழுது தெரிகிறதா அந்த வழக்கம் என்னவென்று?

ஃ ஃ ஃ

பொதுஜனங்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ளும் தபாற்கந்தோர், இ. போ. ச., பொலிஸ் முதலிய பொது ஸ்தாபனங்கள் மீது நாள்தோறும் வசைகளும் வக்கணைகளும் வந்து விழுந்துகொண்டிருப்பது சகஜம். நோயாளிகளான பொதுஜனங்களுடன் பழகும் ஆஸ்பத்திரி மீது எத்தனை ஏவுகணைகள் பாயும் என்று சொல்லவேண்டியதில்லை.

இடநெருக்கடி முதலிய பல வசதியீனங்களுக்கிடையே நோயாளிகளுடன் பொறுமையோடும் இதமாகவும் நடந்துகொள்வது லேசான காரியமன்று. நோயுற்றவர்களுக்கு ஆறுதல் வார்த்தை கூறி சிகிச்சை அளித்து அவர்களுடைய துன்பத்தைப் போக்கும் தொழிலைப்போல உன்னதமான தொழில் உலகில் வேறெதுவுமில்லை.

யாழ்ப்பாணம் பெரியஆஸ்பத்திரியில் விரும்பத்தக்க பல மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதாக தெரியவருகிறது. டாக்டர் முதல் கங்காணிவரை நோயாளிகளுடன் இதமாகப் பழகிக்கொள்ளுகிறார்களாம். வாட்டுகள் கூடியவரை துப்புரவாக வைத்திருக்கப்படுகின்றன. தவறுசெய்யும் ஊழியர்களுக்கு உடனே அபராதம் விதிக்கப்படுவதால் எல்லோரும் தத்தம் கடமைகளை செவ்வனே செய்கிறார்களாம்.

கடுமையான நோயாளிகளை உள்ளே தூக்கிச் செல்வதற்கு தூக்குபடுக்கை தூக்குபவர்கள் இப்பொழுதெல்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் மீண்டும் லிபரல் கட்சி ஆட்சி

## புதிய பிரதமர் ட்ரூடோ மக்கள் ஆதரவு பெற்றார்

ஒட்டாவா, ஜூன் 26

நேற்று நடைபெற்ற கனடாவின் பொதுத்தேர்தலில், ஆளுங்கட்சியான லிபரல் கட்சி, மீண்டும் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இத்தேர்தல் கடந்த ஆறு வருடங்களில் நான்காவது தேர்தலாகும்.

ஆளுங்கட்சியான லிபரல் கட்சியின் தலைவரும், நாட்டின் பிரதமருமான திரு லெஸ்டர் பியேர்ஸன், அண்மையில் தமது பதவியிலிருந்து ஓய்வுபெற்று, தமது இடத்தில் திரு. ட்ரூடோவை நியமித்தார்.

நாட்டின் பிரதமரான திரு. ட்ரூடோ, தமது பலத்தைப் பரீட்சிக்குமுகமாக இத்தேர்தலுக்குக் கோரியிருந்தார்.

தேர்தலில் முதலில் வந்த முடிவுகளின், லிபரல் கட்சித் தலைவர் திரு. ட்ரூடோவும், எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சித் தலைவர் திரு. ஸ்டான் பீல்டும் தமது ஸ்தானங்களை மீண்டும் கைப்பற்றினர்.

நடந்து முடிந்த தேர்தலில் பார்லிமெண்டின் 260 ஸ்தானங்களுக்கு, 1000 அபேட்சகர்கள் போட்டியிட்டனர். இத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதிபெற்றவர்களின் எண்ணிக்கை 1கோடியே10லட்சமாகும்.

அமெரிக்க

## ஏழைமக்கள் இயக்கத்தலைவர் அபெர்நதிக்கு 20 நாள்சிறை

வாஷிங்டன், ஜூன் 26

நேற்று மூன்றினம் கைது செய்யப்பட்ட அமெரிக்க ஏழை மக்கள் இயக்கத்தின் தலைவர்களோடாக்டர் அபெர்நதி, சட்டவிரோத கூட்டம் நடத்திய குற்றச்சாட்டில், 20 நாள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளார்.

சிறையிலிருந்து எழுதியுள்ள கடிதமொன்றில் வாஷிங்டன் வந்த ஏழை மக்கள் இயக்கத்துக்கு ஊட்டமளிக்குமாறு அமெரிக்க மதகுருமார் அனைவரையும் கேட்டுக்கொண்டுள்ளார்.

தம்மைப் பொலிஸார் கைதுசெய்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட பலாத்காரத்தை டாக்டர் அபெர்நதி, தமது கடிதத்தில் கண்டித்துள்ளார். போராட்டப் பிரச்னையை இத்தகைய பலாத்காரம் குழப்பிவிட்டுவிடும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், வாஷிங்டனில் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ளது.

## பதவிதுறந்த பீஹார் முதல்வர் இடைத்தேர்தல் நடத்தசிபார்சு

பட்னா, ஜூன் 26

நேற்றுராஜினாமாச்செய்த பீஹார் முதல் மந்திரி திரு. பஸ்வான், சட்ட சபையைக் கலைத்து, இடைத்தேர்தல் நடத்துமாறு கவர்னருக்கு ஆலோசனை கூறியுள்ளார்.

பீஹார் சட்ட சபையின் காங்கிரஸ் கட்சியின் தலைவரான திரு. மகேஸ் பிரஸாத் சின்ஹாவைக் கவர்னர் தம்மைச் சந்திக்குமாறு அழைத்துள்ளார்.

இடைத்தேர்தல் நடத்த வேண்டுமென்ற திரு. பஸ்வான் கோரிக்கை பற்றித் திரு. சின்ஹா குறிப்பிடுகையில், அப்படி இடைத்தேர்தல் நடத்துவதற்கான அரசியற் சாஸனப் பிரச்னை எதுவும் ராஜ்யத்தில் எழவில்லை என்று கூறினார்.

பிரஜா சோஷலிஸ்ட், சோஷலிஸ்ட், கம்யூனிஸ்ட் கட்சிகளும் இடைத்தேர்தல் நடத்தவேண்டுமென்றே கருத்து வெளியிட்டுள்ளன.

## வட அத்லாந்திக் ஒப்பந்த நாடுகள்

ரெயின்ஜாவிக், ஜூன் 26

ஐஸ்லாந்தில் கடந்த இருதினங்களாகக் கூடிப் பேசிய வட அத்லாந்திக் ஒப்பந்த நாடுகளின் வெளியுறவு மந்திரிகள், மேற்கு பெர்லினுக்கான சுதந்திரப்போக்குவரத்துக்கு உறுதியளித்துள்ளனர்.

ஐரோப்பாவின் பரஸ்பர படைக்குறைப்புப் பற்றிய பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள வருமாறு, ரஷ்யாவையும் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளையும் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## தென்வியட்னும் இராணுவம் அதிகரிக்கப்படும்

சைகோன், ஜூன் 26

தென்வியட்னமில், அதன் படை எண்ணிக்கை இவ்வாண்டு இறுதிக்குள் 8 லட்சத்துக்கு அதிகரிக்கப்படும்.

தென்வியட்னமில் ஒரு பொது ஆள்திரட்டுத் திட்டமொன்றை அண்மையில் தேசிய சட்டசபை அங்கீகரித்திருந்தது.

## மிஸோக்கள் கொல்லப்பட்டனர்

மணிப்புரி, ஜூன் 26

மிஸோ கலகக்காரர்க்கும், எல்லைப்புறப் பாதுகாப்புப் படையினருக்குமிடையே நடைபெற்ற மோதலொன்றில், பல மிஸோக்கள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எல்லைப் படையினருக்கு எவ்வித ஆட்சேதமும் ஏற்படவில்லை.

## வகுப்புவாதத்தை அனுமதிக்கக்கூடாது

### பஞ்சாப் முதல் மந்திரி கருத்து

அமிர்தசரஸ், ஜூன் 26

அமிர்தசரஸில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையில், ராஜ்ய கட்டத்தில் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை நிறுவுவதானால், வகுப்புவாத பிரிவினைச் சக்திகளைத் தலைதூக்க அனுமதிக்கக்கூடாது என்று பஞ்சாப் முதல்மந்திரி திரு. லக்ஷ்மண் சிங் கில் வலியுறுத்தியுள்ளார்.

## ரஷ்யாவில் இந்திய வர்த்தக மந்திரி

மாஸ்கோ, ஜூன் 26

ரஷ்யாவுக்கு விஜயம்செய்துள்ள இந்திய வர்த்தக மந்திரி திரு. தினேஷ்சிங், வெளிநாட்டு வர்த்தகத்துக்கான ரஷ்ய மந்திரியுடன் நேற்றுத்தமது இரண்டாவது சுற்றுப் பேச்சு வார்த்தைகளை நடத்தியுள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையே வளர்ந்துவரும் வர்த்தகத்தை மேலும் அபிவிருத்தி செய்வதுபற்றி இரு மந்திரிகளும் ஆராய்ந்தனர்.

## உலக மொழி

மாஸ்கோ, ஜூன் 26

அனைத்துநாட்டு விஞ்ஞானிகளாலும் ஓர் உலக மொழியாக உருவாக்கப்படுமென்றும் அது துணைமொழியாக இருந்து மக்களின் பங்கெடுப்புடனும் கட்டுப்பாட்டின்கீழும் மனித குலத்தின் முக்கிய மொழியாக மாறுமென்றும் எர்பர் ஸ்வதோஸ்த் என்னும் சோவியத் பேராசிரியர் "உலக மொழி எவ்வாறு வளரும்" என்ற நூலில் எழுதியுள்ளார்.

தேசிய மொழிகளிலிருந்து உலக மொழி தோன்றுவதுபற்றியும், எதிர்கால சமுதாயத்தில் எல்லா மொழிகளும் ஒரு மொழியாக இணைவதுபற்றியும் இவர் ஆராய்ந்துள்ளார். இவ்வாராய்ச்சிக்குப் பிறகு, "உலக மொழியின் பணிகளை உயர்ந்தபட்சம் விரிவுபடுத்துதல்" என்ற கொள்கையை இவர் உருவாக்கியுள்ளார். இக் கொள்கையின் சமுதாய-அரசியல், தத்துவார்த்த, கலாசார, வரலாற்று இயல் அம்சங்களையும் இவர் எடுத்துக்கூறுகிறார். 'எஸ்பராந்தோ' போன்ற இன்றைய துணை மொழிகளை ஆராய்ந்து அவற்றின் ஆக்கபூர்வமான அம்சங்களையும் பலவீனமான அம்சங்களையும் எடுத்துக் காட்டுகிறார். இரண்டு உலகப் பொது மொழிகள் என்ற கொள்கையையும் இவர் ஆராய்கிறார். எஸ்பராந்தோ ஒரு துணைமொழியாக மாறுவதுபற்றியும் இன்னும் நெடுங்காலத்திற்கு உலகப் பொது மொழிப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதைத் தள்ளிப்போடுவதுபற்றியும் இவர் குறிப்பிடுகிறார்.

## பாரிஸில்

## வியட்னும் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பம்

பாரிஸ், ஜூன் 26

ஒருவார இடைவெளிக்குப்பின்னர், வியட்னும் பூர்வாங்க சமாதானப் பேச்சுவார்த்தைகள் இன்று மீண்டும் பாரிஸில் ஆரம்பமாகின்றன.

அமெரிக்கப் பிரதிநிதிகள் கோஷ்டித்தலைவர் திரு. அவரெல் ஹரிமன், கலந்தாலோசனைகளுக்காக வாஷிங்டன் சென்றிருப்பதால், இன்றைய பேச்சுவார்த்தைகளின்போது, அமெரிக்கப் பிரதிநிதிகள் கோஷ்டிக்கு, அதன் உபதலைவரான திரு. சைரஸ் வான்ஸ் தலைமை தாங்குகிறார்.

வடவியட்னும் பிரதிநிதிகள் கோஷ்டியில் எவ்வித மாற்றமும் கிடையாது.

## ஒரிஸ்ஸா

## மந்திரிசபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

புவனேஷ்வர், ஜூன் 26

ஒரிஸ்ஸாவில், சுதந்திரா-ஜனசங்க கூட்டுமந்திரி சபை மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம், அடுத்தமாதம் முதலாந்திகதியன்று, சட்டசபையின்விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுமெனத் தெரியவருகிறது.

இத்தீர்மானம் மீதான விவாதம், இன்று நடைபெறுவதற்கென முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், வேறு முக்கிய காரணங்களுக்காக, விவாதம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## சிலி நாடு எதிர்நோக்கும் கடும் வரட்சி

சாண்டியாகோ, ஜூன் 26

சிலிநாடு கடந்த 100 வருட காலத்திலேயே மிக மோசமான வரட்சியை எதிர்நோக்கியுள்ளது.

உணவு, நீர் பற்றுக்குறையை ஏற்படுத்தப்போகும் இந்த வரட்சியினால், ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள நாட்டின் பொருளாதார நிலைமை மேலும் மோசமாகுமெனச் சிலி விவசாய மந்திரி எச்சரித்துள்ளார்.

## ஐ. அ. கு. தேர்தல்களில் 50 லட்சம் பேர் வாக்களிப்பு

கெயிரோ, ஜூன் 26

ஐக்கிய அரபுக் குடியரசில் அரபு சோஷலிஸ யூனியனின் அடிப்படைக் கமிட்டிகளுக்கான அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்கென நேற்று 50 லட்சத்துக்குமதிகமான மக்கள் வாக்களிப்பில் கலந்து கொண்டனர்.

அரபு சோஷலிஸ யூனியன்தான், ஐக்கிய அரபுக் குடியரசில் உத்தியோக பூர்வமான அங்கீகாரம் பெற்ற ஒரே அரசியற்கட்சியாகும். ஐ. அ. கு. ஜனாதிபதி நாஸரின் 'அரசியற் கரம்' என இக்கட்சி விளக்குகிறது.

நேற்று சுமார் 12,000 நிலையங்களில் மக்கள் வாக்களித்தனர். அடிப்படைக் கமிட்டிகளுக்கு 7,000 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படவிருக்கின்றனர்.

அரபு சோஷலிஸ யூனியனில் நாஸர் திட்டமிட்டுள்ள சீர்திருத்தங்களின் முதற்படியாகவே இந்த அடிப்படைக் கமிட்டிகளுக்கான தேர்தல் நடைபெறுகிறது.

## தந்தை கண்டித்ததால் தற்கொலை

இலையாணை, புதன்

தந்தை கண்டித்ததால் 17 வயதுடைய மகன் இராசதுரை வரதராசா என்பவர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

இப் பரிதாப சம்பவம் அல்வாய் தெற்கில் நடைபெற்றது.

உடுப்பிட்டி சந்தைக்கருகாமையிலுள்ள 'சராச்' ஒன்றில்மெக்கானிக்ராக வேலை செய்யும் இவர் அங்கேயே சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

மரணவிசாரணை அதிகாரி திரு. தமோதரம்பிள்ளை தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## மாஸ்கோவில்

## சர்வதேச இரசாயன மாநாடு

மாஸ்கோ, ஜூன் 26

சர்வதேச இரசாயன மாநாடொன்று மாஸ்கோவில் ஆரம்பமாகியுள்ளது. இம்மாநாட்டில் 1000 சோவியத் விஞ்ஞானிகளும் 28 நாடுகளின் 50க்குமதிகமான அயல்நாட்டு விஞ்ஞானிகளும் கலந்து கொள்கின்றனர். இயைபியக்க ஊக்கம், எதிரியக்கத் துரிதம் ஆகியன சம்பந்தப்பட்ட இம்மாநாட்டில் இயைபியக்க ஊக்கச் செயற்பாடுகளை முன்னாய்ந்து அறிவது பற்றிய பிரச்னைகள் ஆராயப்படும்.

## கைத்தொழில் அபிவிருத்தி

வட்டுக்கோட்டை, புதன்

"விவசாயத்தைப் பெருக்கி, விவசாயப் பொருட்களின்மூலம் நாட்டின் தேவைகளை பூர்த்திசெய்ய வேண்டுமென அரசாங்கம் திட்டங்கள் பல ஆக்கிசெயற்படுத்துவதுபோல, கைத்தொழில், குடிசைக் கைத்தொழில் மூலம் அப்பொருட்களின் தேவைகளையும் பூர்த்தி செய்து தன்னிறைவு நாட்டில் ஏற்படுத்தவேண்டும் என்று அரசாங்கம் பல தொழிற் திட்டங்களை உருவாக்கி வருகிறது:' என்று கூட்டுறவு சிரேஷ்ட ஆணையாளர் திரு கே. என். பொன்னுத்துரை இங்கு நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரைநிகழ்த்தும்போது கூறினார்.

## 'தெல்லிப்பழை கி. ச. இடைத்தேர்தல்

யாழ்ப்பாணம், வின.

அடுத்தமாதம் 8-ம் திகதி தெல்லிப்பழை கிராமசபையின் 19 ம்வட்டார இடைத்தேர்தல் நடைபெற இருக்கிறது. (ந.நி)

## சேவையை எவரும் மறக்கமுடியாது

யாழ்ப்பாணம், வின.

கடந்த 32 வருடங்களாகத் தலைமைஆசிரியராக இருந்து கல்விமுன்னேற்றத்திற்கும் கிராமமுன்னேற்றத்திற்கும் உழைத்தவரின் சிறந்த சேவையை எவரும் மறந்துவிடமுடியாது என்று இருப்பிட்டி சைவவித்தியாசாலை தலைமைஆசிரியராய் இருந்து ஓய்வுபெற்ற திரு. வ. மாணிக்கத்திற்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார விழாவில், அத்தியார் இந்துக் கல்லூரி உபஅதிபர் திரு.க. அருணாசலம் கூறினார்.

திரு மு. வேலாயுதபிள்ளை தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் பண்டிதர் சி. கந்தையா, திருவாளர்கள் அ. விஸ்வநாதன், இ. செல்லத்துரை, ச. தம்பிராசா, அ. வை. முத்துச்சாமி மற்றும் பலர் பாராட்டிப் பேசினர்.

## 'நடவடிக்கை எடுங்கள்'

யாழ்ப்பாணம், வியா.

தீண்டாமை ஒழிப்பில் உறுதியான பலனுள்ள நடவடிக்கைகள் எடுத்து உடனடியாக சமூக ஏற்றத்தாழ்வு நீக்கும் சட்டத்தை அமுல்செய்யும்படி பிரதமரையும் பொலிஸ்இன்ஸ்பெக்டர் ஜெனரலையும் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் வட இலங்கை ஐக்கிய கள்ளு தொழிலாளர் சங்க மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இம் மகாநாட்டில், மாவிட்டபுரம் ஆலயப்பிரவேசத்திற்கு பூரண ஆதரவை அளிப்பதென்றும், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்திற்கு ஆதரவளிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழாசிரியர் சங்க மகாநாடு

அளவெட்டி, புதன்

அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழாசிரியர் சங்கத்தின் 17 வது வருடாந்த விசேஷமகாநாடு அடுத்தமாதம் 1ம் திகதி கொட்டாஞ்சேனை மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும் திரு அ. சண்முகதாசன் தலைமையில் நடைபெறும் இம் மகாநாட்டுக்கு பிரதம விருந்தினராக உள்ளூராட்சி அமைச்சர் கௌரவ எம். திருச்செல்வம் கலந்து கொள்வார்.

இம்மகாநாட்டில் கல்வி அமைச்சு உதவிக்காரியதரிசிசிறில் கமகே காங்கேசன் துறை எம். பி. சா. ஜே. வே. செல்வநாயகம் உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம். பி. யுமான திரு. மு. சிவசிதம்பரம் உபமகாவித்தியாதிபதி திரு டி. எம். ஹெட்டியாராச்சி வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் வி. துரைசிங்கம் செகத்தையா ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள்.

---

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியாழன் 27-6-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

844 மீற்றர் அல் 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 ஆதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

844 மீற்றர் அல் 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

844 மீற்றர் அல் 61 மீற்றர்

மாலை 5-00 கல்விச் சேவை, 5-15 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 மாணவர்மன்றம்.

இரவு 6-15 பாட்டு — தனலட்சுமி சண்முகராசா, 6-45 பாவனம், 7-00 இராமசஞ்சிகை, 7-30 குங்குமம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பல்கலைக்கழக மாணவருக்கான விரிவுவுரை, 9-45 பாட்டு — ஏ. எஸ். நாராயணன்.

## சைக்கிள் திருடர் தொல்லை

உடுவில், புதன்

சுன்னாகம் பொலிஸ் பகுதிக்கு உட்பட்ட சந்தரோடை, மாகியபிட்டி, அளவெட்டிதெற்கு போன்ற இடங்களில் அண்மைக்காலங்களில் சைக்கிள் திருடர் தொல்லை அதிகரித்து வருகின்றது. இதுசம்பந்தமாக சுன்னாகம் பொலிஸில் ஏராளமான முறைப்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளனவாம். பொலிசார் இக்களவினை குறைக்க தீவிரரோந்து சுற்றும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

## வழக்குத் தொடருவர்

கொழும்பு, புதன்

ஒழுங்கான முறையில் நடந்துகொள்ளாத இ. போ. சபை சாரதிகள்மீது பொலிசார் வழக்குத்தொடரவிருக்கின்றனர்.

## சிகை அலங்கரிப்பாளர் சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், வியா.

வடமாகாண சிகை அலங்கரிப்பாளர் முன்னேற்றச் சங்கக் கூட்டம் சங்கத்தின் உபதலைவர் திரு சி. செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது.

தொழிலுக்குரிய ஆயுதங்களை தருவித்துத் தருவதற்கு ஆவன செய்யவேண்டுமென அரசாங்கத்தைக் கோரும் தீர்மானமொன்று கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. அடுத்தமாதம் 6ம் திகதி புதிய நிர்வாக சபை தெரிவும் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

---

## புன்னாலைக்கட்டுவன் ஆலய அபிஷேகம்

நல்லூர், புதன்

புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவைச் சித்திவிநாயகர் அபிஷேகம் நேற்று சிறப்பாக நடைபெற்றது. புலவர் க. குமாரசுவாமிப்பிள்ளை 'இளையான் குடிமாற நாயனார்' எனும் சரித்திர காலாக்ஷேபம் நிகழ்த்தினார்.

---

## அனலைதீவில் நெசவுசாலை

அனலைதீவு, புதன்

அனலைதீவு நெசவுசாலை கட்ட வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனலைதீவு கிராமமுன்னேற்றச் சங்கத்தினரால் கட்டப்படும் இக்கட்டடத்திற்கு ரூபா 2000 நன்கொடை வழங்கப்பட்டுள்ளது.

## ஐந்துநாள் இசை விழா

### பிரதேசக்கலைமன்றம் நடத்தும்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணப் பிரதேச கலைமன்றத்தினர் ஐந்து நாட்கள் இசைவிழா வொன்றை நடாத்தவிருக்கின்றனர். இதற்காக சுமார் ஐயாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற மன்றத்தின் மத்திய குழுக்கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திரு. வேணன் அபயசேகரா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

அடுத்த செப்டம்பர் மாதத்தில் இந்த இசைவிழாவை நடாத்துவதென்றும், இதற்கு கல்யாண கிருஷ்ண பாகவதர் போன்ற பிரபல்யமான இசைவல்லுநர்களையும் அழைப்பதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

பிரதேச கலைமன்றத்தின் இலக்கியக் குழுவின் புதிதலைவராக நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி அதிபரான திரு. எஸ். ஸ்ரீனிவாசனை நியமிப்பதென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. தற்போதைய தலைவரான திரு. உருத்திரமூர்த்தி [மகாகவி] இடமாற்றம்பெற்று செல்கின்றார்.] [கா. நி

---

## இன்றைய பலன்

[27-6-68]

ஆனி மீ 14 உ

வியாழக்கிழமை

திதி- சதியை.

நட்சத்திரம்- புதம் பூசம் இரவு 11-45 வரை மேல் பூசம்.

ராகுகாலம்- 1-25 8-55

சுபநேரம்- 7-25—8-55.

---

இன்று பிறந்தவர்களுக்கு— இவ்வாண்டு வேதனைக்குரிய தானாலும் வெற்றி உங்களுக்கே. தொழில் சமவிருத்தியும் வணிகத்துறையில் நல்ல வாய்ப்பும், வாகனசுகம், காதலர் வாழ்வில் களிப்பூட்டும் நிகழ்ச்சியும் தாரத்துச் செய்தியுமரை உண்டாக்கும் ஆண்டாகும்.

---

மேஷம்- தொழிலில் தொல்லை புனைந்துரை கேட்டல்.

ரிஷபம்- புதுமையில் நாட்டம், வரவில் உயர்வு.

மிதுனம்- தொல்லைகள் பெருகும் பொல்லாங்கு கேட்டல்.

கடகம்- இன்னலின் பின் மனப்போராட்டம்.

சிம்மம்- மனதில் ஆனந்தம், வசீகரப்பார்வை.

கன்னி- மோசடி நடக்கும் உபத்திரவம் மிகுதி.

துலாம்- வாகனம் வாங்குவதற்குவகையான தினம்.

விருச்சிகம்- பொருள் வரவு பூமி லாபம்.

தனுசு- கலையில் தாக்குதல் ஆயுதபீடை.

மகரம்- சன்னியம் சேரும், இதயங்கள் அணையும்.

குமபம்- பாதையில் இடர்கள் பார்த்துப்போ.

மீனம்- தந்தைதாய் பேண், தனம் கிடைக்கும்.

[illegible] வேலுப்பிள்ளை

## விவசாயிகளுக்கு ஒரு யோசனை

வட்டுக்கோட்டை, புதன்

"விவசாயிகள் தாம்பெற்ற கடனை திருப்பிச் செலுத்தி விடுவதால் கடன் எடுக்கும் வங்கிகளிடமிருந்து மீண்டும் கடன் பெறக் கூடியதாக இருக்கும் இதனைக் கருத்தில் கொண்டு விவசாயிகள் தமது கடன்களைத் திருப்பிச் செலுத்த முன்வர வேண்டும்" என கூட்டுறவு கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய யாழ்ப்பாண மேலதிக அரசாங்க அதிபர் திரு ஜே. எம். சபாரத்தினம் குறிப்பிட்டார்.

மக்களின் நலன் கருதி விவசாயத்துறையில் பலவசதிகளை அரசாங்கம் செய்து வருவதாகவும் இதனால் வாலிபர் பலருக்கு வேலை கிடைத்துள்ளதாகவும் அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்.

---

## 'விவசாய படையில் சேருங்கள்'

உடுவில், புதன்

"இன்று நாட்டில் நிலவும் வேலையில்லாதோர் தொகையை ஓரளவேனும் குறைக்க வேண்டுமானால் கல்வமடு முத்தையன்கட்டு போன்ற குடியேற்றத் திட்டங்களில் அமைக்கப்பட இருக்கும் விவசாயப் படையில் உடனடியாகச் சேர முன்வாருங்கள்" என்று உடுவில் இளைஞர் மன்றத்தின் விசேஷ கூட்டத்தில் பேசிய திரு. எஸ். நடராத்தினம் கூறினார்.

திரு பி. கமலநாதன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

---

## பரிசளிப்புவிழா

காங்கேசன்துறை, புதன்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வருடாந்த பரிசளிப்புவிழா அடுத்தமாதம் 6-ம் திகதி நடைபெறவிருக்கிறது. வடபகுதி சட்டவிரோத குடியேற்ற தடுப்பு பகுதி பொலிஸ் சுப்ரீண்டன் திரு. ஸ்டான்லி சேனநாயகா பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

---

## சங்குவேலி ஆலய சங்காபிஷேகம்

சுழிபுரம், புதன்

சங்குவேலி சிவஞானப் பிள்ளையார் கோவில் மகா கும்பாபிஷேகம்நடைபெற்ற ஐம்பதாண்டுகள் பூர்த்தியானதை முன்னிட்டு நவோத்தர சஹஸ்ர சங்காபிஷேகம் கடந்தவியாழக்கிழமைசிறப்பாக நடைபெற்றது.

## 'மின்சாரம் எப்போது?'

சுழிபுரம், புதன்

சுழிபுரம் கிராம சபை எல்லைக்குட்பட்ட வரியிறுப்பாளர்கள் பலர் தங்களுக்கு எப்போது மின்சாரம் வழங்கப்படும், அதற்கான நடவடிக்கைகள் எப்போது எடுக்கப்படும் என்பதை கோரி, மகஜரொன்றை உள்ளூராட்சி அமைச்சருக்கு அனுப்பியுள்ளனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள எல்லாக் கிராம சபைகளும் மின்சாரம் பெற்றுக்கொள்ளவும், புதிதாக வேலைகள் நடந்துகொண்டும் இருக்கையில் சுழிபுரம்கிராம சபை மட்டும், மின்சாரம் பெறுமல் இருப்பது ஏன் என்பது புரியவில்லை என்றும் உடனடியாக மக்களின் தேவையை பூர்த்தியாக்க நடவடிக்கை எடுக்கும்படியும் மகஜரில் கோரியுள்ளனர்.

---

## வண்டத்தரிப்பு ப. ச எல்லை அமைப்பு

சுழிபுரம், புதன்

புதிதாக உருவாகப்போகும் வண்டத்தரிப்பு பட்டின சபைக்கு சுழிபுரம் கிராம சபையிலிருந்துபோகும் நான்கு வட்டாரங்களின் எல்லைகள் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என்பதை தீர்மானித்து நடவடிக்கை எடுக்கும் கூட்டம் சுழிபுரம்கிராம சபை மண்டபத்தில் நடைபெற்றது.

சுழிபுரம் கிராமசபைத் தலைவர் அந்தந்த வட்டார அங்கத்தவர்கள் உள்ளூராட்சிப் பகுதி விசாரணையாளர் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து எல்லைகளை வகுத்தனர்.

---

## நாதஸ்வர வித்துவானுக்கு தங்கப்பதக்கம்

அளவெட்டி, புதன்

புலியங்கூடல் அம்மன் கோவில் திருவிழாவில் சிறப்பு கலைநிகழ்ச்சியில் கலந்துகொண்ட நாதசுரகானகலாநிதி திரு. என். கே. பத்மநாதனின் நாதசுரத் திறமையைப்பாராட்டி அத்திருவிழா உபயகாரர்கள் ஒரு தங்கப்பதக்கத்தை வழங்கியுள்ளனர்.





# உஷா நீல சோப்

ஓர் மெச்சத்தக்க உள்ளூர் உற்பத்தி
சோப்புகளில் சிறந்தது!
நீலமின்றி நிகரற்ற வெண்மையை அளிப்பது
உஷா நீல சோப் ஒன்றே

தயாரிப்பாளர்கள்:

பிரபாத் இன்டஸ்ரீஸ்,
72, ஸோண்டர்ஸ் பிளேஸ், கொழும்பு-12

வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்!
ஐ. சின்னத்துரை அன் சன்ஸ்,
13, பஜார் லேன், யாழ்ப்பாணம்.
போன்: 7157

இறைவன் திருமேனியில்
## சந்தனக் காப்பிட்டு
அலங்கரிக்க மிகவும் உகந்த
# பச்சை சந்தனம்
உடனுக்குடன் அரைத்துக் கொடுக்கிறோம்.
என்றும் எங்களிடம் கிடைக்கும்
## சுந்தரம் பிரதர்ஸ்
கோவில் அபிஷேகப் பொருட்கள்
மருந்துச்சரக்கு விற்பனையாளர்
73, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.

மட்டக்களப்பு ஆனைப்பந்தி
## பிள்ளையார் கோவில்
பிரம்ம ஸ்ரீ வி. வரதராசக் குருக்கள்
எழுதுவது:

அன்புடையீர்,

நீங்கள் அனுப்பி வைக்கும் பச்சைச் சந்தனம் சுத்தமானதாகவும் நறுமணமுள்ளதாகவும், தூய்மையாகவும் இருக்கிறது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஆனைப்பந்தி பிள்ளையாருக்குச் சந்தனக்காப்புச் சாத்தி பணிந்து அருள் பெறுகிறார்கள் அடியார்கள். உங்கள் சேவை தொடர்ந்து நடந்து வர வேண்டுமென்று எல்லாம் வல்ல சித்தி விக்னேஸ்வரனை வேண்டுகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ராதா"
ஜகன் மோகன் பத்தி
மங்கள வைபவங்களுக்கு
மகிழ்வூட்டும் சுகந்த நறுமணம் தரும்
ஜகன்மோகன் பத்திகளை பாவியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
ராதா பெர்பியூமரி அன் ராதா புறடக்ஸ்
ஏக விநியோகஸ்தர்கள்:
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
160, செட்டியார் தெரு கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068

கடைசி 3தினங்கள் மட்டும்
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சி
ஜெய்சங்கர்-கே.ஆர். விஜயா
நடிக்கும்
முகூர்த்த நாள்

வின்ஸர்
முத்துராமன்
உதயசந்திரிகா
நடித்த
ராஜாத்தி

இன்று முதல் ஆரம்பம்!
ராணி சினிமா
[யாழ்ப்பாணம்]
ஜெமினி கணேஷன், சரோஜாதேவி,
நாகேஷ், விஜயநிர்மலா
நடித்த
ரவி தயாரிப்பு
பணமா! பாசமா!
கதை-வசனம்-டைரக்ஷன்:
கே. எஸ். கோபாலகிருஷ்ணன்.

கிங்ஸ்லி பிளாசா ஜைலன்
வெலிங்டன் [யாழ்ப்பாணம்] விஜயா [மட்டக்களப்பு] ராஜ் [நீர்கொழும்பு]
ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] விஜிதா [அட்டன்] அயன் [மன்னார்]
★ ஜெமினி கணேசன்
★ கே. ஆர். விஜயா
நடித்த



ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ் ராமு

# நெல்லியடி ம. ம. வித்தியாலய விளையாட்டுப் போட்டி முடிவுகள்

உடுப்பிட்டி, புதன்

"எந்தொழிலுக்கும் முயற்சி அத்தியாவசியம். நான் வெளியூர்களில் கடமையாற்றியபோது யாழ்ப்பாணத்து மக்கள் முயற்சியுள்ளவர்கள் எனக் கூறுவதைக் கேட்டுள்ளேன். ஆனால் இன்று எவரும் முயற்சியிலீடுபடுவதில்லை. முயற்சிக்கும் கல்விக்கும் நெருங்கிய தொடர்புண்டு. முயற்சியின்றி வெற்றி பெற முடியாது. பெற்றோர் தமது பிள்ளைகளைச் சிறு காரணங்களுக்காகவும் பாடசாலைகளுக்கு அனுப்பாது வீடுகளில் மறித்து வைத்திருப்பது பிள்ளைகளின் கல்விக்குத் தடையாகும். ஒழுங்காகப் படிப்பதின்மூலமே கல்வியில் முன்னேறலாம்."

இவ்வாறு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வருடாந்த இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப்போட்டிப் பரிசளிப்பு விழாவிற்குத் தலைமை வகித்த அதிபர் திரு. கே. சிவசிதம்பரம் தனது உரையில் கூறினார்.

இப்போட்டியில் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு:

கீழ்ப்பிரிவு: ஆண்கள்-எஸ். தியாகலிங்கம் [பாரதி], மத்தியபிரிவு: எஸ். கே. சிவபாலன் (பாரதி), கே. ஸ்ரீரங்கநாதன் [இளங்கோ], மேற்பிரிவு: சி. சண்முகநாதன் (பாரதி), ஏ. கே. தவராசா [பாரதி].

கீழ்ப்பிரிவு: பெண்கள்-வே சாந்திமதி (பாரதி], மத்தியபிரிவு: வி. இளந்தேவி (வள்ளுவன்], எஸ். ஜெகதாதேவி [இளங்கோ], மேற்பிரிவு: பி. யோகாம்பிகை [பாரதி], நீளம்பாய்தலில் வி. இளந்தேவி [வள்ளுவன்] 13' 4'' பாய்ந்து புதிய சாதனையை ஏற்படுத்தினர். சி. சண்முகநாதன் [பாரதி], 400 மீட்டர் ஓட்டத்தில் புதிய சாதனையையும், ரீ. ஞானரமணன் [இளங்கோ] உயரம் பாய்தலில் புதிய சாதனையையும் ஏற்படுத்தினர்.

பாரதி இல்லம் 520 புள்ளிகளைப் பெற்று இவ்வருடச் சாம்பியனாகியது. கம்பன் இல்லம் 404 1/2 புள்ளிகளைப் பெற்று இரண்டாவதாகவும். வள்ளுவன் இல்லம் 393 புள்ளிகளைப் பெற்று மூன்றாவதாகவும் வந்தன. இளங்கோ இல்லம் 351 1/2 புள்ளிகளைப் பெற்றுக் கடைசி ஸ்தானத்தை அடைந்தது.

வெற்றியீட்டிய மாணவ, மாணவிகளுக்கு திருமதி எஸ். சிவசிதம்பரம் பரிசில்களை வழங்கினர்.

வல்வெட்டித்துறை

# சிதம்பராக் கல்லூரி விளையாட்டுப்போட்டி முடிவுகள்

வல்வெட்டித்துறை, புதன்

வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன. பிரதம விருந்தினராக வடமாகாண விஞ்ஞான பரிசோதகர் திரு. எம். அற்புதநாதன் கலந்து கொண்டார். நான்கு இல்லங்களிடையே நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் ரங்கநாதன் இல்லம் முதலாம் இடத்தையும், குமரகுரு இல்லம் இரண்டாம் இடத்தையும் சிதம்பரப்பிள்ளை இல்லம் மூன்றும் இடத்தையும், சின்னத்தம்பி இல்லம் நான்காமிடத்தையும் பெற்றன. விளையாட்டு விபரம் பின்வருமாறு:-

கீழ்ப்பிரிவு(ஆண்கள்): 200 யார் ஓட்டம்: ஏ தேசராசா, வி யோகசிகாமணி, எஸ். சந்திரராசா.

நீளம்பாய்தல்: எஸ் விஜயராசா, கே தியாகலிங்கம், வி யோகசிகாமணி.

உயரம் பாய்தல்: எஸ் விஜயராசா, கே நாகேஸ்வரன், பி பாலேந்திரா.

மத்திய பிரிவு ஆண்கள்: 400 யார் ஓட்டம்: எஸ் சிவநேசசுந்தரம், எஸ் புவனேந்திரன், ஏ அருள்பகவான்.

நீளம்பாய்தல்: எஸ் சிவநேசசுந்தரம், கே பாலசுந்தரம், வி சொர்ணவடிவேல்.

உயரம்பாய்தல்: பி ராதாகிருஷ்ணன், எஸ் இராமதாஸ், ஆர் தர்மவேலாயுதம்.

பரிதிவட்டம்; ஆர் அருள்ஞானம், ரி மகேஸ்வரராசா, கே நிரஞ்சனகுமார்.

சாக்கோட்டம்: எஸ் இராமநாதன் துரை, கே விமலதாஸ், ஏ பிரேமதாஸ்.

குண்டுஎறிதல்: ஆர் அருள்ஞானம், ஏ அருள்பகவான், ரி மகேஸ்வரராசா.

முப்பாய்தல்: எஸ் சிவநேசசுந்தரம், பி உதயகுமார், ரி மகேஸ்வரராசா.

மேற்பிரிவு ஆண்கள்; 800 யார் ஓட்டம்: ஏ கதிர்காமலிங்கம், ரி நாகஸ்வரன், எஸ் ரி எம் நைனுமரிக்கார்.

1500 யார் ஓட்டம்; எஸ் ரி எம் நைனுமரிக்கார், கே கதிரமலை, எஸ் சக்திவேல்.

நீளம்பாய்தல்: எஸ் சிவனருள்சுந்தரம், வி சந்தானகோபால், எஸ் குகப்பிரதாசன்,

உயரம் பாய்தல்: எஸ் செல்வச்சந்திரன், எஸ் ரி எம் நைனுமரிக்கார். கே பிரேமதாஸ்.

கோலூன்றிப் பாய்தல்: கே பிரேமதாஸ், எஸ் குகப்பிரதாசன், எஸ். சுந்தரராஜன். ஈட்டிஎறிதல்: எஸ். செல்வச்சந்திரன், ரி. பாலச்சந்திரன், பி. விஜயகுமார். பரிதிவட்டம் எறிதல்: எஸ். சுரேந்திரதாஸ், எஸ். குகப்பிரதாசன், ஈ ஜெயரத்தினம், குண்டெறிதல், எஸ். சுரேந்திரதாஸ், ரி. நாகேஸ்வரன், வி. சிவவடியார்.

அதிமேற்பிரிவு (ஆண்கள்) 800 யார் ஓட்டம்: எஸ். தங்கவடிவேல, எம். கந்தசாமி, ஜி. ஜெயபாலன், குண்டெறிதல்: எஸ். தங்கவடிவேல், எஸ். ஞானகுரு எஸ். சிவதாஸ். தடைஓட்டம்: எஸ். சிவதாஸ், ஜி. ஜெயபாலன், எஸ். சோதிலிங்கம்.

கீழ்ப்பிரிவு [பெண்கள்] 50 யார் கயிறு அடித்தல்: எஸ். தெய்வமலர், எஸ். கமலாதேவி, ஆர். குகலஷ்சுமி. நீளம்பாய்தல்: எஸ். தெய்வமலர், வி. வசந்தாதேவி, எஸ். சுகிர்தா. சங்கீதக்கதிரை: எஸ். கலாமணி, எஸ். பிரேமாவதி, கே. விஜயசாந்தி

மத்தியபிரிவு [பெண்கள்] 100யார் ஓட்டம்: ஏ. மகேந்திரம்மா, ஆர். யசோதா, ஏ. பாலகுமாரி. 50 யார் கயிறடித்தல்: ஏ, மகேந்திரம்மா, ஆர். யசோதா, எஸ். அன்னராணி, நீளம்பாய்தல்: ஏ மகேந்திரம்மா எஸ். அமிர்தேஸ்வரி, ஆர். யசோதா. தடைஓட்டம்: ஏ. பாலகுமாரி, எஸ். மகேஸ்வரி, கே. சுகுணராணி.

மேற்பிரிவு [பெண்கள்] 100 யார் ஓட்டம்: எஸ்.

(6-ம் பக்கம் பார்க்க)

MANOHARA
JAFFNA
Daily at 4-45,
7-00 & 9-45 P. m.
John Wayne
in
ELDORADO
Color

REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P M.
Richard Johnson &
Elke Sommer
in
DEADLIER THAN
THE MALE
[Adults Only]

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கொட்டடி, ஆஸ்பத்திரி வீதியில் தெரு ஓரமாக 2 பரப்பு நிலம் உடனே விற்பனைக்குண்டு. ஆர். ஏ. தம்பையா, பேரின்பநாயகம் ஒழுங்கை, கண்டிக்குளி. 1387

### தேவை

பாவித்த தமிழ் தட்டெழுத்து இயந்திரம் வாங்கப்படும். தொடர்பு கொள்ளவும். ஹோமனி பாடசாலை, கண்டி வீதி, கிளிநொச்சி. 1388

விஞ்ஞான ஆசிரியர்கள் உடன் நியமனங்களுக்குத் தேவை. யாழ்ப்பாண டியுடோறியல் கல்லூரி, 60, அரசடி வீதி, (தட்டாதெரு சந்தி), யாழ்ப்பாணம். 1389

### கல்வி

ஆங்கிலத்தில் வல்லமையுள்ள ஆசிரியர்/கிளார்க்; உடனடியாக விஞ்ஞான பட்டதாரிகள்; நூலகரிசியர் ஒருவருக்கு உதவிசெய்ய; ஆங்கிலப் பட்டதாரிகள்; ஆங்கில இலக்கியமும்; பாடதிட்டப் புத்தக வகுப்புகளும், ஜி. சி. ஈ. (சாதாரணம்) 1968 நடக்கின்றன. E. றெடர் பி.விற், இல. 2 பருலாய் வீதி, சுழிபுரம். 1383

### வாடகைக்கு

வீடு:

மனோகரா தியேட்டருக்கு அருகாமையில் பாவனைக்குரிய 5 அறைகளுடன் உண்டு. சைவர் விரும்பத்தக்கது. விபரங்களுக்கு: டாக்டர் பாலசிங்கம், 146, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 1390

# மரண அறிவித்தல்

மலாயா புகையிரதப் பகுதி இளைப்பாறிய ஓடிற்றர் திரு. நா. செல்லத்துரை அவர்களின் பாரியாரும், குருநாகல் பொதுவேலைப்பகுதியைச் சேர்ந்த திரு. எஸ். பாலசுப்பிரமணியம் அவர்களின் மாமியாரும், சொர்ணலெட்சுமியின் தாயாரும், தனலெட்சுமி, கெங்காதரன், பிரமோதரன், பத்மினி, சிறீதரன், சசிதரன் ஆகியோரின் பேத்தியாருமான **செல்லத்துரை செல்லம்மா** காலமாகிவிட்டார்.

இவரது பூதவுடல் 13, வைமன் வீதியிலிருந்து 27-6-68 வியாழக்கிழமை காலை 8 மணிக்கு ஈமக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். 846

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழாலை—குப்பிளான் கோஷ்டி சண்டைகளுக்கு முற்றுப்புள்ளி

## அமைதியாக வாழ இணக்கம்

குரும்பசிட்டி, செவ்வாய். ஏழாலை, குப்பிளான் ஆகிய இரு கிராமங்களைச் சேர்ந்த இளைவாலிபர்களிடையே ஏற்பட்ட கோஷ்டிச்சண்டை, கலவரங்களினும் மேலும் எதுவித அசம்பாவிதங்களும் நிகழாதவாறு நிலைமையைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் இரு பகுதியாரையும் கன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஆர். ஏ. ஜேக்கப் அழைத்து சமாதான மகாநாடு நடத்தினர்.

இம்மகாநாட்டில் சமூகமளித்திருந்த சம்பந்தப்பட்ட இரு கிராமத்தவரும் ஒற்றுமையாக இருக்க இணக்கம் தெரிவித்தனர். இதையடுத்து சமாதானக் கமிட்டியொன்று பொலிஸ் இன்ஸ்பெக்டரால் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

உடுவில் எம். பி. திரு.வி தர்மலிங்கம், ஏழாலை கிராமசபைத்தலைவர் திரு. கே. சிவகுரு, கிராம சேவையாளர் ஆகியோரும் இம்மகாநாட்டில் கலந்துகொண்டனர்.

இக்கலவரங்களால் ஐந்து வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதுடன் பலர் தாக்கப்பட்டமையும் தெரிந்ததே.

## பூநகரி கிராம சபை தேர்தல் முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன்

பூநகரி கிராமசபைத்தேர்தலில் ஒருவர் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார். இருவர் கட்டுப்பணத்தை இழந்தனர். மொத்தமாக எட்டு வட்டாரத்திலும் பதினறுபேர் போட்டியிட்டனர்.

பூநகரி கிராமசபைத்தேர்தல் முடிவுகள் வருமாறு:- 1-ம் வட்டாரம்: திரு. என். செல்வத்துரை 117, திரு. எஸ். சதாசிவம் 98. 2-ம் வட்டாரம்: திரு. எஸ், சுந்தரம்பிள்ளை 110, திரு. ஆர். தில்லைநாதன் 9. 3-ம் வட்டாரம்: திரு. எம். சின்னையா 217, திரு. பி. கனகரத்தினம்68, திரு. பி. தர்மலிங்கம் 6. 4-ம் வட்டாரம்: திரு. கே தனபாலசிங்கம்207 திரு. ஏ. சுப்பையா 165. 5-ம் வட்டாரம்- திரு. எஸ். பொன்னம்பலம் 128, திரு. கே. செல்லையா 83. 6-ம் வட்டாரம்: திரு. ரி செல்வரத்தினம் 135, திரு. வி. பரமநாதன் 108. 7-ம் வட்டாரம் திரு. வி. வல்லிபுரம் [போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்]. 8-ம் வட்டாரம் திரு. ரி. நாகேந்திரம் 184, திரு கே கதிர்காமநாதர் 157. (நநி)

## பல்லவராயன் கட்டு

பூநகரி - பல்லவராயன் கட்டு கிராமசபைத் தேர்தலில் மூவர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர், மூவர் கட்டுப் பணத்தை இழந்தனர். மொத்தமாக எட்டு வட்டாரத்திலும் 18 பேர் போட்டியிட்டனர்.

முடிவுகள் பின்வருமாறு, 1-ம் வட்டாரம்: திரு. எஸ். தில்லைநாதன் (போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்), 2-ம் வட்டாரம் திரு: எம். சேனாதிராசா 50, திரு. வி. அம்பலவாணர் 6. திரு. சிற்றம்பலவாணர் 22. 3-ம் வட்டாரம்: திரு. எஸ். ஐயாத்துரை 6, திரு. எஸ். இரத்தினம் 42, திரு. கே. குமாரசாமி 16, திரு. கே. சிவசாமி 27. 4-ம் வட்டாரம்: திரு. குஞ்சுத்தம்பி 89, திரு. கே. பரமானந்தம் 64, 5-ம் வட்டாரம்: திரு. ஐ. அருணாசலம் [போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்], 6-ம் வட்டாரம்: திரு. ஐ. நித்தியானந்தம் 61, திரு. வி. சிவன் 56. 7-ம் வட்டாரம்: திரு. எஸ், பொன்னுச்சாமி 162, திரு. எஸ். சண்முகம் 142, திரு. வி. நல்லையா 122. 8-ம் வட்டாரம்: திரு. எம். கச்சிமுகமது [போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்]. [நநி]

## மாலைதீவு செல்பவர்க்கு பிரிவுபசாரம்

வல்வெட்டித்துறை, புதன்

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி அதிபராகக் கடமையாற்றி அண்மையில் இளைப்பாறிய திரு. தை. அருள்சுந்தரமும் அவரது பாரியாரும் மாலைதீவுக்கு ஆசிரியத் தொழில்புரியச் செல்வதை முன்னிட்டு அப்பகுதி மக்கள் நகரசபைத் தலைவர் திரு. எம். வி. இரத்தினவடிவேல் தலைமையில் ஒரு பிரிவுபசார வைபவத்தை நடாத்த ஏற்பாடுசெய்துள்ளனர்.

## சிதம்பரா ......

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

இராஜேஸ்வரி, வி. பரமேஸ்வரி, எஸ். அருந்தமலர். குண்டெறிதல்: ஏ. சீதாதேவி, எஸ். கமலாதேவி, வி. மகேஸ்வரி, நடைஓட்டம்: கே. ரஞ்சினி, வி. பரமேஸ்வரி, பி. வதனராணி.

சாம்பியன் [ஆண்கள்] அதிமேற்பிரிவு: எஸ். தங்கவேல், மேற்பிரிவு: எஸ். செல்வச்சந்திரன், மத்திய பிரிவு: எஸ். சிவநேசசுந்தரம், கீழ்ப்பிரிவு: எஸ். விஜயராசா.

சாம்பியன் [பெண்கள்] மேற்பிரிவு: வி. பரமேஸ்வரி, மத்திய பிரிவு: மாமேதினிஅம்மா, கீழ்ப்பிரிவு: எஸ். தேவமலர்,

ஒருமைல் ஓட்டம்பழைய மாணவர்: ரி. இரவீந்திரன், எம். இராசரத்தினம்.

இல்ல அலங்கரிப்பு: குமரகுரு இல்லம், இரங்கநாதன் இல்லம், சின்னத்தம்பி இல்லம்.

## நாட்டிலும் நகரிலும்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

வாய் மிக கண்ணியமாக திறமிருக்கலாம்.

ஒரு நோயாளிக்கு ரத்தம் ஊட்டவேண்டுமானால் முன்பெல்லாம் இதே தொழிலாகக்கொண்டு ஆஸ்பத்திரிக்குள்ளே சுற்றித் திரியும் தரகனுக்கு ஐம்பது ரூபா என்று கொடுத்தே ரத்தம்பெறவேண்டும். இப்பொழுது கடுமையானவரை ஆஸ்பத்திரி ரத்த வங்கியில் இருந்தே ரத்தம் ஊட்டப்படுகிறது.

பெரிய ஆஸ்பத்திரிக்கு கிடைத்துள்ள இந்த நல்ல பெயர் மேலும் வளர வேண்டும்.

--வழிப்போக்கன்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## யாழ். நகரில் நவரச நாடகாலயம்

யாழ்ப்பாணம், வியா.

'சிறுகதை, கவிதை, நாவல் போன்ற நாடகத்தின் மூலமும் நல்ல பல சிரிய கருத்துக்களை மக்கள் புரிந்துகொள்ளும் படியாக, மக்களின் நேர்முக தரிசனத்தின் மூலம் பல உண்மைகளையும் வையத்தில் வாழ்வாங்கு வாழும் முறையையும் சொல்லமுடியும். நாடகம் தமிழர்கள் வாழ்வில்தோன்றிய முக்கலைகளில் ஒன்று'

யாழ்ப்பாணத்தில் நவரச நாடகாலயம் அங்குரார்ப்பண விழாவில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய திரு. ஐயா ஜோசப் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மன்ற நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். ஆலோசகர்:- திரு. ஐயா ஜோசப், செயலாளர்: திம். எம். அல்போன்ஸ் அரியநாயகம், பொருளாளர்: பொ. குணம்.

5 பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## பேராதின கருத்தரங்கு

யாழ்ப்பாணம், வியா.

பேராதினங்களில் சங்கானைப் பட்டினசபை நூலகத்தில் மாலையில் கருத்தரங்கு நடாத்துவதற்கு சங்கானைப் பட்டினசபை ஒழுங்கு செய்துள்ளது. இக்கருத்தரங்கில் பலகட்சிகளின் அரசியல்தலைவர்களும்பேசுவதற்கு அழைக்கப்படுவார்கள்.

## ஒருவர் கைது

வல்வெட்டித்துறை, புதன்

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் இம்மாதம் 14ந் திகதி அடிகாயங்களுடன் அனுமதிக்கப்பட்ட பருத்தித்துறையைச் சேர்ந்த அருச்சுனரா மரணமானதைத் தொடர்ந்து அதே இடத்தைச்சேர்ந்த எஸ். தேசராசா என்பவரை பொலிசார் கைதுசெய்து றிமாண்டில் வைத்துள்ளனர். இதைத் தொடர்ந்து மற்றும் சோதி, கார்த்திகேசு ஆகியஇருவரைபொலிசார் தேடுகின்றனர்.

யாழ்நகரில்

## லடீஸ் குழுவினர் வில்லுப்பாட்டு

யாழ்ப்பாணம், வியா.

மகாகவியின் 'கண்மணியாள் காதை' வில்லுப்பாட்டை லடீஸ் வீரமணி குழுவினர் இம்மாதம் 30ந்திகதி செல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் மாலை நடாத்துவர்.

## அதிபர்

யாழ்ப்பாணம், வியா.

நேற்று 'ஈழநாட்டில்' 'எல்லோரும் கோவிலுள் செல்லும் நாள் விரைவில்வரும்' என்றதலைப்பில் வந்தசெய்தியில் வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகத்தின் முன்னைநாள் அதிபர் செல்வி காசிப்பிள்ளை என பிரசுரமாகியிருந்தது தவறு இப்போதைய அதிபர் எனஇருந்திருக்கவேண்டும்.

## சிறுவர் சித்திரக் கண்காட்சி

யாழ்ப்பாணம், வியா.

உடுவில் வட்டாரப் பாடசாலைகளின் சிறுவர்சித்திரக் கண்காட்சி சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் வரும் சனிக்கிழமையும் ஞாயிற்றுக் கிழமையும் நடைபெறவிருக்கிறது. யாழ்ப்பாண உதவி [illegible] ஆரம்பித்துவைப்பார்.

# வவுனியாச்செய்திகள்

## தேசிய......

1-ம் பக்கத் தொடர்ச்சி

அரசாங்கத்தின்கொள்கை நாட்டுமக்களை முன்னேற்றமாட்டாது. எதிர்க்கட்சிகள் சரியான முறையில் இயங்கத் தவறிவிட்டன. தென்னிலங்கையில் அரிசிக் குறைப்பை எதிர்த்து எதிர் கட்சிகள் போராடியிருந்தால் அப்பொழுதே தேசிய அரசாங்கம் வீழ்ந்திருக்கும். அரிசிக்குறைப்பு, சம்பளக் குறைப்பு முதலியவற்றால் மக்களின் உரிமை படிப்படியாகப் பறிக்கப்பட்டு வருகின்றன.

### தென்னிலங்கையிலும் சாதிப்பிரச்னை

வடமாகாணத்தில் சாதிப் பிரச்னை நிலவுவது தமிழர்கள் வெட்கப்படவேண்டிய ஒரு விஷயமாகும். சாதி வேறுபாடு வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டுமல்ல தென்னிலங்கையிலும் காணப்படுகின்றது. சிறுபான்மைத் தமிழரை என்றும் அடிமையாக வைத்திருக்கமுடியாது. தலைவர்கள் வழிகாட்டத் தவறியமையினாலேயே சாதிக் கலவரங்கள் ஏற்பட்டன. முதலாளித்துவ வர்க்கம் இலாபம்பெறவே திட்டம் தீட்டுகிறது. ஆனால் மக்களுக்குக் கிடைப்பது தீமையே.

### அடையானஅட்டை பிரச்னை

'நாட்டிலே விவசாய முன்னேற்றம் அடைந்துவிட்டோம் எனக்கூறும் பிரதமர் ஏகாதிபத்திய நாடுகளிடம் 30 கோடி ரூபா உணவுப் பொருட்களைக் கையேற்றியுள்ளார். அவசரகாலச்சட்டத்தின்கீழ் ஆட்சி செய்வதில் சுதந்திரக் கட்சியினரின் சாதனையை ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கம் முறியடித்துவிட்டது. இச்சட்டம் பிரகடனப்படுத்தப் பட்டு இன்று 800 நாட்கள் ஆகின்றன. அடையாள அட்டை மூலம் தமிழ்-சிங்கள மக்கள் அடிமைகளாக்கப்படுவர். இம்மசோதாவால் கள்ளத்தோணிகள் மட்டுமல்லாது அரசியல் எதிரிகளையும் அரசாங்கம் பழிவாங்கக்கூடும். இவ்விடயத்தில் ஊர்காவற்றுறை எம். பி. நேர்மையுடன் செயல் புரிந்தது பாராட்டிற்குரியது.

தமிழினம் 15 வருடங்களுக்குமுன்பு இருந்தது போலவே இன்றும் உரிமைகளை இழந்து நிற்கின்றனர். மீண்டும் பொதுத் தேர்தலை நடத்துவதே பிரச்னைகள் தீர ஒரேவழியாகும். ஒரு புதிய பாதையை வகுத்து அவ்வழியில் செல்வதாலேயே விமோசனம் பெறலாம், புதிய தலைவர்கள் உருவாகுவதின்மூலம் அரசியல் சரித்திரம் மறுமலர்ச்சி பெறும்.:'

சாளம்பைக்குளம் உபவட்டாரத் தமிழ் பாடசாலைகளின் கலைவிழா இம்மாதம் 28-ம் திகதி சாளம்பைக்குள மகாவித்தியாலய மண்டபத்தில்திரு. ந ஜெயபாலசிங்கம் தலைமையில் நடைபெறஇருக்கிறது

ஃ ஃ ஃ

வவுனியா உபவட்டாரப் பாடசாலைகளின் கலைவிழா இம்மாதம் 29-ந் திகதி சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் திரு. கு. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறவிருக்கிறது.

ஃ ஃ ஃ

### 'வவுனியா தீர்த்து வைக்கும்'

''எமது நாட்டின் சுயதேவையில் முக்காற்பங்கினை வவுனியாமாவட்டம் தீர்த்து வைக்கும் என்பதில் ஐயமில்லை. விவசாயிகளின் குறைகளை எந்நேரமும் தீர்த்துவைக்க நான் தயாராக உள்ளேன். உணவு உற்பத்தியைப் பெருக்கும் விவசாயிகளை நடக்கும் கூட்டங்களிற்குத் தலைமைவகிக்க விட வேண்டும்'' என்று வவுனியா அரசாங்க அதிபர் திரு. பி. சி. பெரேரா வவுனியாப்பகுதிக் காரியாதிகாரி காரியாலயத்தில் நடைபெற்ற உணவு உற்பத்திக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

## கல்வி......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போதிய வருவுடன் இயங்க முடியாது தவிக்கிறது. இந்நிலை மாற படித்த வாலிபர் முன்வர வேண்டும்.

இலங்கையின் கல்வித்திட்டம் எம் பொருளாதாரத்தை வளர்க்கத் தவறுகிறது.

டென்மார்க்கிலே கால்நடை முக்கிய பாடமாக அமைந்துள்ளது இதனால் இந்நாட்டின் பிரதானதொழிலை மாணவர் பிரதானமாகக் கொண்டு கற்று தேசத்துக்கு உதவுகின்றனர். இதேபோன்றே மற்றைய நாடுகளும் பொருளாதாரக் கல்விக்கே முதலிடம் அளிக்கின்றன. இலங்கையிலும் இதேபோன்ற கல்வித்திட்டம் ஏற்பட வேண்டும்.''

கவர்ச்சியான இழை
நீடிய பாவிப்பு
சொகுசான ஓட்டம்
உத்தரவாதமுள்ள வேலைப்பாடு
ஆகியவற்றுக்கு
உங்கள் தேய்ந்துபோன டயர்களை
எம்மிடம் புதுப்பியுங்கள்
நோர்தேண் இன்டஸ்ட்ரீஸ்
டயர் நிரப்புபவர்கள்
8/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org